ආයතනයේ නම -රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

நிறுவனத்தின் பெயர் – பதிவாளர் நாயகத் திணைக்களம்

பாராளுமன்றத்தில் அரச கணக்குகள் பற்றிய செயற்பாட்டுக்குழுவினால் சபைக்கு வழங்கப்பட்ட அறிக்கை சம்பந்தமாக நிரந்தர கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்பு மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

**Name of the Institution – Registrar Generals' Department**

**Submission of the Observations of Honorable Minister and the steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order 119(4).**

இலங்கைப் பாராளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளை 119 (4) தொடர்பாக எடுக்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை
பாராளுமன்ற வெளியீடு தொடர் எண். 183
திணைக்களம் : பதிவாளர் நாயக திணைக்களம்

| | பொதுக் கணக்குக் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | தற்போதைய முன்னேற்றம் |
|---|---|---|---|
| 1 | வருடாந்திர நிதிநிலைமை அறிக்கைகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், வருடாந்த செயற்திறன் அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படாததால், அதனை அறிக்கையுடன் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல்களை வழங்குதல் | 2022 ஆம் ஆண்டில், நிதிநிலைமை அறிக்கைகளுடன் வருடாந்திர செயல்திறன் அறிக்கையைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல். |
| 2 | பணியாளர் ஊதிச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் பதிவேடு / பணியாளர் ஊதிய அட்டைகள் என்பன இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முந்தைய ஆண்டுகளில் காணப்பட்ட நடைமுறை சிக்கல்கள் காரணமாக பணியாளர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் பதிவேடுகள் இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அந்த பணியாளர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் பதிவேடுகளை இற்றைப்படுத்த தேவையான வசதிகள் வழங்கப்பட்டன. | 2020 மற்றும் 2021 பணியாளர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் பதிவேடுகள் முழுமையாக இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான பணியாளர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் பதிவேடுகள் இற்றைப்படுத்தலானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| 3 | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட ஆவணங்களை உடனடியாக இற்றைப்படுத்த நிறுவனப் பிரிவு மற்றும் கணக்குப் பிரிவுகளுக்கு அறிவுறுத்துதல். | வாகனங்கள் தொடர்பான இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேடு பராமரிக்கப்பட்டு வருவதுடன் இழப்புக்கள் தொடர்பான பதிவேடு ஒன்றினை பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 4 | 171/2004 ஆம் இலக்க 2004.05.11 ஆம் திகதிய பொதுக் கணக்குச் சுற்றறிக்கையின் படி, அரசு சம்பளம் தயாரிக்கும் கணினி மென்பொருள் தொடர்பான முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது கடவுச்சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாற்றப்பட்டிருக்கவில்லை. | பொதுக் கணக்குச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் படி மூன்று மாதங்களுக்கு ஒருமுறை உரிய கடவுச் சொற்களை மாற்றுமாறு பதவிநிலை மற்றும் விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | சம்பந்தப்பட்ட கடவுச் சொற்கள் ஏற்கனவே மாற்றப்பட்டுள்ளன, மேலும் சம்பளம் தயாரிக்கும் கணினி மென்பொருள் தொடர்பான முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது கடவுச் சொற்களை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாற்றுவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 5 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வழங்கப்பட்டிருந்த ஒவ்வொரு கணக்காய்வு ஐய வினாவிற்கும் ஒரு மாத காலப்பகுதிக்குள் பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 50 நிலப் பதிவாளர் அலுவலகங்கள், 7 வலய அலுவலகங்கள் , 17 மாவட்ட உதவிப் பதிவாளர் நாயக அலுவலகங்கள் மற்றும் 330 மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் கடமைச்சார் அலுவல்களை நிறைவேற்றுவதுடன், கணக்காய்வு ஐய வினாக்களுக்கு சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் இருந்து உடனுக்குடன் தகவல்கள் பெறப்பட்டு, கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளிக்க நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. | கூடிய விரைவில் பதில்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 6 | உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | பதவிநிலை உத்தியோகத்தர்களின் கூட்டங்கள் மற்றும் முன்னேற்ற ஆய்வுக் கூட்டங்களில் உரிய திகதிக்குள் உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கு உரிய காலப்பகுதியில் பதில் அளிக்குமாறு தலைமை அலுவலகம் உட்பட உப அலுவலகங்களின் உத்தயோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல். | உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கு உரிய தினத்தில் பதில்கள் அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. |
| 7 | 1/2017 இலக்க 2017.06.26 ஆம் திகதிய சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆவது பந்தியின் படி, 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் அகற்றுதல் தொடர்பான தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திற்கு [illegible] | வாகனங்களை கொள்வனவுச் செய்தல், கட்டிடம் கொள்வனவுச் செய்தல் தொடர்பான தகவல்களை கட்டுபாட்டாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. | 2021.12.31.ஆம் திகதிக்கு வாகனங்கள் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் 2022.10.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கட்டிடங்கள் பற்றிய தகவல்கள் (2021.12.31 ஆம் திகதிக்கு) 2022.12.31 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது. |
| 8 | 5/2016 இலக்க 2016.03.31 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பொருட் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு , அது தொடர்பான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய தொற்றுநோய் காரணமாக, பொருட் கணக்கெடுப்பு பணியை திட்டமிட்ட திகதியில் முடிக்க முடியாமல் போனதுடன், பொருட் கணக்கெடுப்பு பணியை திட்டமிட்ட திகதிகளுக்கு முன்னதாக முடிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டிற்கான பொருட் கணக்கெடுப்பு அறிக்கைகள் 2021.06.30 ஆம் திகதிக்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |
| 9 | வருடாந்திர பொருட் கணக்கெடுப்பில் வெளிப்படுத்தப்பட்ட அதிகப்படியான, குறைபாடுகள் தொடர்பான பரிந்துரைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் என்பனவும் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பொருட் கணக்கெடுப்பு அறிக்கைகள் தொடர்பாக, குறைபாடுகள், மேலதிக மற்றும் பரிந்துரைகள் தொடர்பாக நடவடிக்கைகள் முறையாக இடம்பெறாமையால், அவற்றை முறையாக செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. | 2022 ஆம் ஆண்டிற்கான பொருட் கணக்கெடுப்பு அறிக்கைகளின் பரிந்துரைகள் தொடர்பாக மற்றும் மேலதிக, குறைபாடுகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| 10 | வாகனமொன்று பாவனைக்குதவாது போய் 06 மாதங்களுக்கு குறைவான காலப்பகுதியில் அகற்றப்பட்டிருக்கவில்லை. | பாவனைக்குதவாத வாகனங்களை அடையாளம் கண்டு, அந்த வாகனங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | அகற்றுவதற்காக அடையாளம் காணப்பட்ட PB-4888, PB-4896, PB-4898 ஆகிய வாகனங்களை சீர்செய்யக்கூடிய முகவர் நிறுவனத்திடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டதன் பிரகாரம், பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |
| 11 | 2016/30 இலக்க 2016.12.29 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு தொடர்பாக சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின்படி, வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு குறித்து சோதனை நடாத்த நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டில், கொவிட் சூழ்நிலை காரணமாக நாடு நீண்ட காலமாக மூடப்பட்டதால், திணைக்கள வாகனங்கள் இயங்காமை மற்றும் 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட எரிபொருள் பற்றாக்குறை காரணமாக மற்றும் இது வரையும் எரிபொருள் ஒதுக்கீட்டிற்கு (கோட்டாவிற்கு) எரிபொருளை பெற்றுகொள்வதனால் வாகனங்களின் எரிபொருள் தாங்கிகளின் முழுமையான கொள்ளலவிற்கு நிரப்ப முடியாது உள்ளமையால் எரிபொருள் சோதனை ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பு இது வரையிலும் கிடைக்கவில்லை. |
| 12 | வங்கி இணக்கக் கூற்றுகள் உரிய திகதிக்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 50 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் 07 வலயங்களில் மற்றும் 17 மாவட்ட உதவிப் பதிவாளர் நாயக அலுவலகங்களில் இருந்து கிடைக்கப்பெறும் வருமானங்கள் பதிவாளர் நாயக கணக்கில் வரவு வைக்கப்படுவதுடன், பொதுமக்கள் தமது சேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வைப்பிலிடும் பணமும் இந்தக் கணக்கில் வரவு வைக்கப்படுவதனால், வங்கி இணக்கக் கூற்றின் பணிகள் மிகவும் சிக்கலாகியுள்ளது. . அப்படியிருந்தும், சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் வங்கி இணக்கக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு அறிக்கைகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு | வங்கி இணக்கக் கூற்றுக்களை தயாரிப்பது சிக்கலானதாக இருந்தாலும், குறிக்கப்பட்டதன் படி வங்கி இணக்கக் கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| 13 | வங்கி இணக்கக் கூற்று அறிக்கைகளில் வெளிப்பட்ட சரி செய்ய வேண்டிய நிலுவைகள் குறித்து, நி.பி.களுக்கமைய ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | பதிவாளர் நாயகத்தின் கணக்கிற்கு வருமானங்கள் வரவு வைக்கப்படுதல் சிக்கலான சூழ்நிலையில் இருப்பதுடன், வங்கிக் கணக்கில் வருமானங்களாக பதிவு செய்யப்பட்ட வரவுகள் ஒரு மாதத்திற்குள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வங்கிக் கணக்கின் சிக்கலான தன்மை காரணமாக வழங்கப்பட்டும் ஆனால் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்கள் முடிவடைந்த காசோலைகள் தொடர்பாக நி.பி. பிரகாரம் நடவடிக்கைகள் எடுப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. | சரிசெய்ய வேண்டிய நிலுவைகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 14 | நி.பி.94(1) இன் படி, ஒரு செலவு விடயமாக கொள்ளப்பட்டிருந்த ஒதுக்கீடு நிதி ஒதுக்கீட்டில் பயன்படுத்தப்பட்ட பின்னர், மீதமுள்ள ஒதுக்கீடு வரம்பு அங்கீகரிக்கப்பட்ட வரம்புகளை மீறி கட்டுப்பாடுகளை (இணைப்புகளை) ஏற்படுத்திக் கொண்டிருந்தன. | சாத்தியமான எல்லா சந்தர்ப்பங்களிலும் இயலுமான வரை நி.பி. 94(1) இன் படி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அண்ணளவாக 70 அலுவலகங்களில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொழுது , மிக அத்தியாவசியமான விடயங்களுக்கு மட்டும் நி.பி. 94 (2) யின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் அத்தியாவசியப் பணிகளுக்காக, நி.பி. 66 யின் மூலம் நிதி ஒதுக்கீடுகளை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தமையால் அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 15 | ஒரு வருட காலத்திற்கு மேலாக தொடரும் மிகுதி கடன் நிலுவைகள் காணப்பட்டன. | மாதாந்திர மிகுதி கடன் நிலுவைத் தொகையை வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக்கவும், இதற்கான முன்னேற்றம் குறித்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தில் கலந்தாலோசிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2022 ஆம் ஆண்டில் ரூ. 2,479,473.40 மிகுதி தொகை ஒன்றினை வசூலித்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மேலும் வசூலிக்கப்பட வேண்டிய மிகுதி தொகை ரூ. 1,716,800.39 ஆகும். இந்த தொகையை இனி மேலும் அறவிட்டுக் கொள்ள முடியாதெனின் தள்ளுபடி செய்யவும் நடவடிக்கை எடுத்தல். |
| 16 | நி.பி. 371 இன் அடிப்படையில் வழங்கப்பட்ட இடைகால கட்டுநிதி முடிந்து ஒரு மாதத்திற்குள் தீர்வு காணப்பட்டிருக்கவில்லை. | சுமார் 70 அலுவலகங்களின் பணிகளுக்கு உப கட்டுநிதி வழங்கப்படுவதனால் உரிய பணிகள் முடிந்து ஒரு மாதத்திற்குள் தீர்வு காண அறிவுறுத்தப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டு முதல் குறித்த பணி முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல். |

| | | | |
|---|---|---|---|
| 17 | மீளாய்வாண்டிற்கான பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயற்திறன் அறிக்கைகள் உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தில் அலுவலகங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு காரணமாக அதற்கான அறிக்கைகளை பெற்றுக்கொள்வதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதால் உரிய அறிக்கைகளை உரிய திகதியில் பாராளுமன்றத்தில் சமர்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், திட்டமிடப்பட்ட திகதிக்கு முன்னதாக அதற்கான அறிக்கையை தயாரித்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. | இந்த செயற்திறன் அறிக்கை தயாரிப்பதற்கு நாடளாவிய ரீதியில் உள்ள வலய அலுவலகங்கள், காணி பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் இருந்து தகவல்கள் சேகரிக்கப்படுவதனால் நாட்டில் நிலவிய கொரோனா தொற்று நிலைமை, எரிபொருள் நெருக்கடி மற்றும் உத்தியோகத்தர்களின் பணி மாறுதல் முறையின் கீழ் கடமைக்கு அறிக்கை செய்தல் காரணமாக செயல்திறன் அறிக்கை தயாரிப்பதற்கு தேவையான தரவுகள் மற்றும் தகவல்களை சேகரிப்பதில் தாமதம் ஏற்பட்டது. செயற்திறன் அறிக்கை மற்றும் ஏனைய அறிக்கைகள் கால தாமதமின்றி சமர்ப்பிப்பதற்காக இற்றைப்படுத்தப்படும் சிவில் பதிவிற்காக மற்றும் காணி மற்றும் ஆவணப் பதிவு தொடர்பான தரவு அமைப்பு நிறுவப்பட்டது. தற்போது செயல்திறன் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

..........................................
பதிவாளர் நாயகம்

பதிவாளர் நாயக திணைக்களம்

P. S. P. Abeywardhana
Registrar General
Registrar General Department
234/A3, Denzil Kobbekaduwa Mawatha,
Battaramulla

..........................................
பிரதான கணக்காளர்

பதிவாளர் நாயக திணைக்களம்

L. A .S. Liyanaarachchi
Chief Accountant
Registrar General's Department
234/A3, Denzil Kobbekaduwa Mawatha,
Battaramulla.

செயலாளரின் பரிந்துரை

பதிவாளர் நாயகத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பதிவாளர் நாயகத்திற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Neel Bandara Hapuhinne
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
Home Affairs Division

நீல் பண்டார ஹபுஹின்ன
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக் குழு மூலம் பதிவாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளருக்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2023 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவ மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)
பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்.